பிதா ஸ்ரீ அவர்களின் புனித நன்னாளில் படிப்பதற்கான பாப்தாதாவின் மதுர மகாவாக்கியம்

ஓம் சாந்தி. இப்போது பகவான் நேரில் அமர்ந்து ஞான கீதம் சொல்கிறார் மேலும் ஞான நடனம் செய்விக்கிறார் என்பதை குழந்தைகள் தெரிந்துள்ளனர். இந்த ஞான நடனத்தால் நீங்கள் தேவதை களைப் போன்று எப்போதும் சுகமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள். பகவானை மட்டுமே எல்லை யில்லா தந்தை என்றும் உலகை படைப்பவர் என்றும் சொல்லப்படுகின்றது. தந்தை நமக்காக சொர்க்கமெனும் பரிசை கொண்டு வந்துள்ளார் என ஆத்மா புரிந்துள்ளது. அவரே படைப்பவர் சொர்க்கத்தின் எஜமானனாக மாற்றவே இராஜயோகம் கற்பிக்கின்றார், தந்தையையும் உலக இராஜ்யத்தையும் நினைவு செய்யுங்கள் தந்தை எல்லையில்லாத எஜமான் எனவே மாபெரும் உலகைப் படைக்கின்றார். குழந்தைகள் உங்களுக்காக அகிலமே வீடாகும் அதாவது நடிப்பதற்கான இடமாகும். எல்லையில்லா தந்தை வந்து எல்லையில்லா உலகை வீட்டை படைக்கின்றார். அதுவே சொர்க்கம் அப்படிப்பட்ட தந்தைக்கு குழந்தைகள் எவ்வளவு நன்றி சொல்ல வேண்டும் உலகை படைக்கும் தந்தை நேரடியாக கூறுகின்றார், நான் உலகை படைக்கும் தந்தை நேரடியாக கூறுகின்றார், நான் உங்களை உலகின் எஜமானாக மாற்ற வந்துள்ளேன். எனவே உங்கள் சுபாவம் மிகவும் முதல்தரமானதாக இருக்க வேண்டும். உங்களது நடத்தையோ இவர் தேவதை போல் இருக்கிறார் என்று அனைவரும் சொல்லும் வண்ணம் இருக்க வேண்டும். தேவதைகள் பிரசித்த மானவர்கள். இவரது சுபாவம் முற்றிலும் தேவதை தான் என்று சொல்வார்கள். முற்றிலும் இனிமையாக சாந்த சுபாவம் உள்ளவர். அப்படிப்பட்ட குழந்தைகளைப் பார்த்து தந்தையும் மகிழ்வார் தந்தை சொர்க்கத்தின் எஜமானனாக மாற்றிட வந்துள்ளார் எனில் குழந்தைகள் எவ்வளவு உதவியாளர் ஆக வேண்டும் சேவையில் தானாகவே ஈடுபட வேண்டும். களைப்பாக உள்ளது, நேரமில்லை என்றெல்லாம் இருக்கக் கூடாது தக்க சமயத்தில் செய்யும் வேலைகளில் தான் நன்மை உள்ளது. யக்ஞ சேவைக்காக இனாம் சிவபாபா தருகின்றார், குழந்தைகளின் தெய்வீக நடத்தையைப் பார்த்து தந்தையே தலை வணங்குகின்றார்.

இந்த படிப்பால் குழந்தைகள் நீங்கள் எவ்வளவு உயர்ந்த வருமானம் ஈடுபடுகின்றீர்கள் நீங்கள் பத்மா பதம்பதி ஆகின்றீர்கள். பாபா உங்களை எவ்வளவு பெரும் செல்வந்தராக்குகின்றார். பாபா உங்களுக்கு அழியாத பொக்கிசங்களை 21 பிறவிகளுக்கு உடனிருக்கும் அளவிற்கு எடைபோட்டு தருகின்றார். அங்கு துக்கம் எனும் பெயரே இருக்காது. இடைக்கால மரணம் ஒருபோதும் நிகழாது. மரண பயம் ஒருபோதும் இராது இங்கே எவ்வளவு பயம், கதறல் உள்ளது. உங்களுக்கோ இந்த பழைய தேகம் விட்டுச் சென்றால் புதிய உலகில்இளவரசன் ஆவோம் என்ற குஷி இருக்கும். நீங்கள் இந்த பழைய உலகிடமிருந்து பற்றுதலை விலக்கிக் கொண்டே செல்லுங்கள். இந்த தேகத்தையும் மறந்து செல்லுங்கள். நாம் ஆத்மா தன்னந்தனியே வந்தோம் ஒரு தந்தையின்றி வேறு எவர் நினைவும் கூடாது. உயிருடன் இருந்தாலும் இறந்த நிலையி-ருங்கள். இவ்வுலகி-ருந்து இறந்தே போனீர்கள். நீங்கள் இறந்தால் உலகமே இறந்ததாம் என்பதாக. தேக உணர்வை விட்டுச் செல்லுங்கள். எகாந்தமாக தனிமையில் அமர்ந்து, பாபா நான் உங்கள் மடியில் வந்தே வந்து

விட்டேன் என்ற நிலையை பயிற்சி செய்யுங்கள் ஒருவர் நினைவிலேயே இந்த உடலின் முடிவு இருக்க வேண்டும் அதுவே ஏகாந்தம் என்று சொல்லப்படும்.

இனிமையான குழந்தைகளே, இவ்வளவு உயர்ந்த கல்வியை கற்பிப்பவர் யார் என்பது உங்களுக்குத் தெரியும் இந்த உயிருள்ள பெட்டிக்குள் உயிருள்ள வைரம் அமர்ந்துள்ளார். அவரே சத் சித் ஆனந்த சொரூபமாவார். ஒரு தந்தையை மட்டுமே நினையுங்கள். அடிக்கடி இந்த பேட்ஜை பார்த்துக் கொண்டிருந்தால் தந்தை மற்றும் ஆஸ்தி நினைவு வந்த வண்ணம் இருக்கும். நினைவாலேயே நீங்கள் முழு உலகிற்கும்அமைதியை தானம் செய்பவராவீர்கள் நீங்கள் ஒவ்வொரு குழந்தைகளும் தனக்கு பிரஜையும் உருவாக்க வேண்டும், வாரிசையும் உருவாக்க வேண்டும். முரளியை ஒருபோதும் தவறக்கூடாது. தந்தை மிக அன்பாக புரிய வைக்கின்றார். இனிமையான குழந்தைகளே தன் மீது இறக்கம் வையுங்கள். தவறேதும் செய்யாதீர்கள். நறுமணம் வீசும் மலர் கவர்ந்திழுக்கும் ஒருவர் எப்படியோ அப்படியே ஒளி தருவார். நறுமணமுள்ள, குணமுள்ள குழந்தைகளை பார்க்கும் போது மகிழ்ச்சியில் கண்கள் குளமாகின்றது, கடினம் ஏற்பட்டால் தந்தை ஒளி தருகின்றார். பாபா புரிய வைக்கின்றார், இனிமையான குழந்தைகளே, நீங்கள் இந்த பழைய உலகில் எந்த ஆசையும் வைக்காதீர்கள். இப்போது நாம் சுகதாமம் (சொர்க்கம்) செல்ல வேண்டும் என்ற உன்னத ஆசை ஒன்றே வைக்க வேண்டும். எங்குமே தடைபட்டு நிற்பதோ, பார்ப்பதோ கூடாது. மிகவும் கவலைக்கிடமான நிலையில் உள்ளது உலகம் இப்போது, முன்னேறிக் கொண்டேயிருங்கள். ஒரு புறம் மட்டுமே பார்த்துக் கொண்டிருங்கள் அப்போதே ஆடாது அசையாது உறுதி நிலை பெறுவீர்கள், இப்போது இந்த உலகம் முடிந்தே போகும். இந்த சமயம் அனைவரையும் விட அதிகமான கோபம் இயற்கை கொள்கிறது எனவே அனைத்தையும் அழித்து விடுகிறது. உங்களுக்குத் தெரியும் இப்போது இயற்கை தன் கோபத்தை அதிகரிக்கும். முழு உலகையும் மூழ்கச் செய்யும். நில நடுக்கத்தால் வீடுகள் யாவும் விழச் செய்யும். பல விதமான மரணம் நிகழும் இவ்வாறெல்லாம் நாடகத்தில் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. இதில் யார் மீதும் தோசமில்லை. வினாசம் நிகழ்ந்தே தீரும். எனவே நீங்கள் புத்தியின் நினைவை விடுவித்துக் கொள்ளுங்கள். நீங்கள் தனதனைத்தையும் காப்பீடு செய்துள்ளீர்கள் எனவே எந்த விதமான கவலையும் வேண்டாம். உங்களுடையது அனைத்தும் லாபகரமாகவே மாறுகின்றது. இப்போது நீங்கள் ஆஹா சத்குரு ஆஹா என்பீர்கள். அவரே நமக்கு இந்த வழி காண்பித்தார். ஆஹா அதிர்ஷ்டமே ஆஹா, ஆஹா டிராமா ஆஹா ! உங்களது உள்ளத்திலிருந்து வருகிறது, நன்றி பாபா நீங்கள் எங்களிடமிருந்து இரு பிடி அரிசி பெற்று கைமாறாக எதிர்காலத்தில் பாதுகாப்பாக நூறு மடங்கு தருகின்றீர்கள் இருப்பினும் குழந்தைகளுக்கு மிகவும் விசாலபுத்தி தேவை. குழந்தைகளுக்கு அளவிலா ஞான செல்வம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது எனவே அளவிலா மகிழ்ச்சி இருக்க வேண்டும். எந்தளவு இதயம் சுத்தமாகுமோ அந்தள விற்கு பிரையும் சுத்தம் செய்வீர்கள். யோக நிலையால் தான் இதயம் சுத்தமாகிறது. குழந்தைகள் உங்களுக்கு யோகி ஆவதிலும், ஆக்குவதிலும் ஆர்வம் வேண்டும். ஒருவேளை மோகம் உள்ளது, தேக அபிமானம் உள்ளதென்றால் தன்னிலை பக்குவமில்லை என்றே உணருங்கள். ஆத்மா அபிமானி குழந்தைகளே சுத்த வைரமாவார்கள். எனவே முடிந்தளவிற்கு ஆத்மாபிமானி ஆக பயிற்சி செய்யுங்கள், தந்தையை நினையுங்கள் பாபா எனும் சொல் அனைத்திலும் மிக இனிமையானது. பாபா

மிகுந்த அன்புடன் குழந்தைகளை தன் கண்ணுக்குள் வைத்துகொண்டு செல்வார். அப்படிப் பட்ட தந்தையின் நினைவெனும் போதையில் நொறுங்கிப் போக வேண்டும். பாபாவை நினைவு செய்து செய்து குளிர்ந்த இரும்பாகி விட வேண்டும். தந்தை எப்படி அபகாரிகளுக்கும் உபகாரம் செய்வது போல நீங்களும் தந்தையை பின்பற்றுங்கள்.. சுகம் தருபவராக இருங்கள். தந்தையின் உள்ளத்தில் குழந்தைகள் அனைவரும் சொர்க்கத்தின் எஜமானாகும் தகுதி பெற்று சதா சுகமாக இருக்க வேண்டும் என்ற எவ்வளவு முதல் தரமான ஆசை வைத்துள்ளார்.

குழந்தைகளான நீங்களும் நாடகத்தின் இரகசியத்தைப் புரிந்துள்ளீர்கள். தந்தை உங்களுக்கு நிராகாரி (ஆத்மலோகம்) ஆகாரி (சூட்சும வதனம்) மற்றும் சாகாரி (மனித பூமி) பற்றிய செய்தி அனைத்தும் தருகின்றார். ஆத்மா சொல்கிறது, இப்போது நான் புதிய உலகம் செல்ல முயற்சி செய்து தயாராவோம். தனக்கும் பிறருக்கும் நன்மை செய்வோம். நல்லது பாபா இனிமையான குழந்தைகளுக்கு புரிய வைக்கிறார் தந்தை துக்கம் நீக்கி சுகம் தருபவர் அவ்வாறே குழந்தைகளும் அனைவருக்கும் சுகம் தர வேண்டும். தந்தைக்கு வலது கரமாகுங்கள் அப்படிப்பட்ட குழந்தைகளே தந்தைக்குப் பிரியமானவர்கள். சுப காரியத்தில் வலது கரமே பயன்படுத்துவார்கள். ஆகவே பாபா சொல்கிறார், ஒவ்வொரு விசயத்திலும் சரியானவராக ஆகுங்கள் ஒரு தந்தையை நினைவு செய்தால் இறுதி நிலை நல்ல நிலையாகும். இந்த பழைய உலகின் மீதுள்ள பற்றை அகற்றி விடுங்கள். இது இடுகாடு. தொழில், குழந்தைகள் நினைவில் இறந்தால் தனக்கு இழப்பையே சேர்ப்பீர்கள். சிவ தந்தையின் நினைவில் இருந்தால்மிகவும் இலாபமே பெறுவீர்கள். தேகபிமானத் தால் நட்டமே ஏற்படுகிறது. ஆத்மாபிமானி ஆவதால் இலாபம் ஏற்படும். செல்வத்தின் மீதும் பேராசை கூடாது, அதே பயத்தில் சிவ தந்தையையும் மறக்க நேரிடும். பாபா பார்க்கின்றார், அனைத்தையும் தந்தையிடம் அர்ப்பணம் செய்த பிறகு எந்தளவிற்கு எனது ஸ்ரீமத்படி நடக் கின்றார்கள். ஆரம்ப கால கட்டத்தில் பாபாவும் (பிரம்மா) டிரஸ்டியாகி காண்பித்தார் அல்லவா. அனைத்தையும் ஈஸ்வர் வேலையிலேயே ஈடுபட வேண்டும் அவ்வளவே தான். தடைகளைக் கண்டு ஒருபோதும் தயங்கக் கூடாது. தன்னால் முடிந்த வரையிலும் சேவையில் தனதனைத் தையும் பயன்படுத்தவும். ஈஸ்வர் அர்ப்பணம் செய்துவிட்டு டிரஸ்டி ஆகி இருக்க வேண்டும் நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதான் அன்பு நினைவுகளும் காலை வணக்கம் ஆன்மீக தந்தையின் ஆன்மீக குழந்தைகளுக்கு நமஸ்காரம்.

அவ்யக்த மகா வாக்கியம் (ரிவைஸ் 15-04-1974)

அனைவரும் முன்னேற்றத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றீர்களா? என்றென்றும் அன்பில் மூழ்கி விக்னவினாசக் எனும் இரு அடையாளங்களையும் அனுபவம் செய்கிறீர்களா? வின்க வினாசக் ஆவதற்கு பதிலாக தடைகளை கண்டமாத்திரமே தன்னிலையிலிருந்து கீழிறங்கி விடுகின்றீர்களா? அனேக விதமாக வருகின்ற புயல் யாவும் உங்கள் புத்தியில் புயலை உருவாக்கிடவில்லையே? யார் மூலமாக பரிசு கிடைக்கும்போது புத்தியில் பதட்டத்திற்குப் பதிலாக உல்லாசமே ஏற்படும், அவ்வாறே வருகின்ற

புயல் உல்லாசத்தை அதிகப் படுத்துகிறதா அல்லது பதட்டத்தை அதிகப்படுத்துகிறதா? புயலை புயலென நினைத்தால் பதட்டம் ஏற்படும் பரிசென நினைத்தால், அனுபவம் செய்தால் உல்லாசம், தைரியம் அதிகரிக்கும் இதுவே ஏறும் கலையின் அடையாளம். பயப்படுவதற்குப் பதிலாக சோதனையெனும் கடலின் ஆழத்திற்குச் சென்று அனுபவமெனும் புத்தம் புதிய இரத்தினங்களை பெறுவீர்கள் ஏனெனில் பதட்டத்தின் ஆழத்தில் சென்றால் ரத்தினங்கள் புதைந் திருக்கும். மேலோட்டமாக வெளிமுகப் பார்வையில் புத்தி மூலமாக பார்ப்பதால் பதட்டமே தென்படும், அனுபவம் ஆகும், மாறாக பெரும் விசயங்களை உள்நோக்கு முகமாக புத்தியில் பார்த்தால் அனேக விதமான ஞான இரத்தினங்களெனும் கருத்துக்கள் கிடைக்கும்.

ஏதேனும் விசயத்தை பார்ப்பதாலோ, கேட்பதாலோ ஆச்சரியம் அனுபவம் ஆகுமானால் இதுவும் இறுதி நிலை அல்ல. இப்படி நடக்கக் கூடாது, நாடகம் எனும் போது இந்த எண்ணம் எழுந்தாலும் பதட்டத்தின் அம்சம் என்றே சொல்லப்படும். இதுவரையிலும் ஏன், என்ன என்ற கேள்வி எழுமானால் இதன் அர்த்தம் பதட்டமே ஆகும். எந்தளவு தடைகள் வருவது அவசியமோ அந்தளவு விக்னவினாசக் நிலையில் இருப்பது இதுவே முக மலர்ச்சிக்கான சாதனம். எதுவும் புதிதல்ல இதுவே இறுதி நிலை ஆகும், யாரேனும் பதட்டத்திற்குரிய செயலே செய்தாலும் நடித்தாலும் கடலுக்கு நிகராக மேலோட்டமாக கர்மேந்திரியங்களால் பதட்டமே ஏற்பட்டாலும் மனோ நிலையில் எதுவும் புதிதல்ல என்றிருக்க வேண்டும். ஏகாக்ரதா, ஏக்ரஸ், ஏகாந்த் என்பது ஒரு படைப்பவர் மற்றும் படைப்பின் இரகசியம் புரிந்து திரிகாலதரிசி நிலையில் ஓய்வாக அமைதியான மனோ நிலையில் நிலைப்பதாகும். மாறாக கர்மேந்திரியங்களின் பதட்டநிலை ஆத்மாவின் மனோ நிலையை அசைத்து விடுகிறதா? கடலானது இரு வடிவங்களையும் காண்பிக்கும் பொழுது மாஸ்டர் ஞான சாகர் அது போன்று வடிவத்தை காண்பிக்க இயலாதா? இந்த இயற்கையும் (கடல்) மனிதனைப் பார்த்தே காப்பி அடித்தது. நீங்களோ புருஷோத் தமர்கள். இயற்கை தன் தகுதியை காண்பிக்க இயலுமெனில் புருஷோத்தமர்கள் காண்பிக்க இயலாதா என்ன?

இப்போது சமயம் கடுமையான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. எல்லா புறமும் தீவிரத் தன்மை தென்படுகின்றது. முடிவின் அடையாளம் தீவிரம். எனவே இயற்கை முடிவை நோக்கி எப்படி அதி தீவிரமாக நகர்ந்து கொண்டிருக்கின்றதோ அவ்வாறே சம்பண்ணமாக முழுமைத் தன்மை அடைய உள்ள ஆத்மாக்களின் எதிரில் தடைகளும், சோதனைகளும் அதி தீவிரமாகவே வரும். எனவே, முன்பெல்லாம் இப்படி இல்லையே, இப்போது ஏன்? என்று ஆச்சரியப்பட வேண்டாம். இது ஆச்சரியம் அல்ல. இறுதி சோதனையில் ஆச்சரிய மூட்டும் விசயங்களும் கேள்விக்குறியாக வரும், அப்போது தானே வெற்றி, தோல்வி அடைய முடியும், தான் விரும்பாதபோதும் புத்தியில் கேள்வியை உருவாக்கும் வண்ணம் விசயங்கள் வரும், இதுவே சோதனை மேலும் அது ஒரு நொடிக்கான சோதனைத் தாள். ஏன் எனும் வண்ணம் எழுந்தாலே சந்திர வம்சத்தின் வரிசையில் நிற்க வைத்து விடும். எனவே (ஏக்ரஸ்) ஒரே சீரான மனோ நிலையில் நிலைத்திருப்பதற்கான பயிற்சியை இடைவிடாது (நிரந்தரமாக) பழகுங்கள். இன்ன லெனும் இருக்கையை இறுக்கமாக பிடித்துக் கொள்ளாதீர்கள். மாறாக இருக்கையில் அமர்ந்து

இன்னலை எதிர்கொள்ளுங்கள். இது வரையில் இன்னல் இருக்கையை நினைவூட்டுகிறது. தடை வருகிறது, அப்போதே விசேஷ யோகம் செய்கிறீர்கள், பட்டி வைக்கின்றீர் கள். இதிலிருந்து எதிரி தான் சஸ்திரங்களை நினைவூட்டுகிறார் என்பதும் இயல்பான நினைவு எப்போதும் இல்லை என்பதும் உறுதியாகின்றது. (நிரந்தர யோகி) இடைவிடாது) யோகம் செய்பவரா (அந்த்தர்) விட்டு விட்டுயோகம் செய்பவரா? பட்டம் என்னவோ நிரந்தர யோகி அல்லவா ! எதிரியே வரக் கூடாது, இன்னலை எதிர் கொள்ள முடியாது, ஈட்டி முள்ளாக மாறுவது, இதுவும் இறுதி நிலை அல்ல. ஈட்டியை முள்ளாக்குவதற்கு பதிலாக யோகக்னியால் தொலைவில் இருந்த படியே சுட்டெறித்து (பஸ்பமாக) சாம்பலாக்கி விடலாமே. முள் குத்த, பிறகு எடுக்க, இது இறதி நிலை அல்ல. முள்ளை அதன் அஸ்திவாரமே இல்லாமல் அழித்து விட வேண்டும். இதுவே இறுதி நிலை. அத்தகைய இலட்சியத்துடன் தன்னிலையை முன்னேறும் கலையில் உயர்த்திக் கொண்டே செல்லுங்கள். பெரிய விசயத்தை சிறியதாக அனுபவம் செய்வது, இந்த நிலை வரையிலும் வரிசைக்கிரமமாக அவரவர் சக்திக்கேற்ப சென்றடைந்து விட்டீர்கள். இப்போது வம்சமென்ன அம்சமும் அடியோடு அழித்து விட்ட நிலையை சென்றடைய வேண்டும்.

நீங்கள் அனைவரும் தைரியம், உற்சாகத்துடன் அனைவருக்கும் ஒத்துழைப்பு செய்தபடி செல்கிறீர்களா! கலியுகமெனும் பழைய உலகை அழிப்பதற்காக மாற்றம் கொண்டு வருவதற்காக, மாயாவிற்கு விடை கொடுப்பதற்காக குழுவாக முற்றுகை செய்துள்ளீர்களா! பலமான முற்றுகையா அல்லது இடையிடையே பலமிழந்து விடுகிறதா அதாவது களைத்து விடுகிறீர்களா அல்லது போகப்போக நின்று விடுகின்றீர்களா? முன்னேறவுமில்லை பின் தங்கவுமில்லை, இருந்த இடத்திலேயே நின்று விடவுமில்லை, இந்த பாடத்தை உறுதி செய்யவில்லையே? நேரம் வந்து தள்ளிவிட்டால் நகர்ந்து செல்லாம் என்று யோசித்துக் கொண்டு இருந்த இடத்திலேயே நின்று விடவில்லையே? இந்த நிலையில் உள்ளவர்களை என்னவென்று சொல்வது? இதுவே அங்கதன் நிலை என நினைக்கின்றீர்களா? அப்படி நின்று விட்டால் பின்னால் இருப்பவர்கள் வேகமாக முன்னேறிச் சென்று விடுவார் களே, மலை மீது பனி பொழிந்து அது பனிக்கட்டியாகி விட்டால் வழி தடைபடும், பிறகு பனி கட்டியை உடைத்து, கரைத்து அப்புறப்படுத்த முயற்சி செய்ய வேண்டும், இங்கும் அவ்வாறே பனிக்கட்டியாக உறைந்து போனால இதிலிருந்து யோக ஆக்னி குறைவு என்று தெரிய வருகின்றது. யோக அக்னியை துரிதப் படுத்துங்கள் அப்போது பாதை தெளிவாகும். கிடைத்துள்ள தைரியம், உற்சாகம் எனும் ஞானக் கருத்துக்களை புத்தியில் ஓட விடுங்கள் அப்போது பாதை தெளிவாகும். முயற்சியின் வேகத்தில் அங்கதன் ஆகுங்கள், மாயையிடம் தோல்வி அடைவதில் அங்கதன் ஆகாதீர்கள் மாறாக வெற்றியடைவதில் அங்கதன் ஆகுங்கள் நல்லது.

உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை மூலம் பாலனை பெறுபவர்கள் உலகையே பாலனை செய்பவர்கள், விஷ்ணு குலத்தின் சிரேஷ்ட ஆத்மாக்கள், இயற்கையை மாற்றும் புருஷோத்தம ஆத்மாக்கள், உலகிற்கு முன்னால் சாட்சாத்கார மூர்த்தியாக வெளிப்பட உள்ள ஆத்மாக்கள், யோகி ஆத்மாக்கள் ஒவ்வொருவருக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.

வரதானம் : சேவையில் இருந்து கொண்டே சம்பூரணத் தன்மையின் சமீபத்தை அனுபவம் செய்பவராக பிரம்மா பாபாவைப் போன்று உதரணமானவர் ஆகுக !

எப்படி பிரம்மா பாபா சேவையில் இருந்தாலும், செய்திகளை கேட்டாலும் ஏகாந்தவாசி ஆகிவிடு வார். ஒரு மணி நேர செய்தியையும் 5 நிமிடத்தில் சரத்தை புரிந்துகொண்டு குழந்தைகளை மகிழ்வித்தும், தன்னுள் அந்தர் முகி (அகநோக்கு முகம்) ஏகாந்தவாசி நிலையை அனுபவம் செய்ய வைத்தார். அவ்வாறே தந்தையை பின் பற்றுங்கள். பிரம்மா பாபா ஒருபோதும் நான் மிகவும் பிசியாக இருக்கிறேன் என்று சொல்லவில்லை ஆனால் குழந்தைகளுக்கு முன்னால் உதாரண மாகத் திகழ்ந்தார். அவ்வாறே சமயத்திற்கேற்ப இப்போது இந்த பயிற்சியே அவசியமாகின்றது. உளப்பூர்வமான ஈடுபாடு இருந்தால் சமயம் சந்தர்ப்பம் தானே தேடி வரும் அனேகருக்கு உதாரணமாகலாம்.

சுலோகன்: ஒவ்வொரு செயலிலும், செயலும் யோகமும் அனுபவமாவதே கர்மயோகம் ஆகும்.

அவ்யக்த அமைதி மூலமாக டபுள் லைட் ஃபரிஸ்தா நிலையை அனுபவம் செய்க :

நாம் பாப்சமான் ஆக வேண்டும் இதனையை சதா இலட்சியமாக வையுங்கள். பாபா எப்படி லைட்டாக இருக்கிறார் அவ்வாறே டபுள் லைட் ஆகுங்கள். பிறரைப் பார்த்தால் பலவீனமாவீர்கள், எனவே தந்தையைப் பாருங்கள், தந்தையைப் பின்பற்றுங்கள், பறக்கும் கலைக்கான உன்னத சாதனம் ஒரு சொல்லே அனைத்தும் உனதே எனது எனும் சொல்லை உனது என்று மாற்றி விடுங்கள். நானே உனது என்றால், ஆத்மா லைட் ஆகும். எப்போது எல்லாம் உனது என்றாகிறதோ அப்போது லைட் லேசாகி விடுகிறது.